

# இரங்கற்பா!

(நீதி அரசர் திரு எஸ். நடராஜன்அவர்களுக்கு)

புன்னகை தவழும் முகமாய்;
பொலிந்த நல்அறிவின் தோற்றம்!
கண்களில் குழையும் கனிவு,
காட்டுமோர் அன்புத் தூவல்!
பொன்னகம் கொண்ட நல்லார்,
புதுமை சீர் உறவின் மாட்சி!
பொன்னம்பலத் தியாகராஜன்
புதல்வியால் கீர்த்தி கண்டார்!

சேலத்துக் கனியைப் போலே
தீஞ்சுவை சொல்லின் வல்லோன்!
ஆலவாய் ஈசன் ஊரோ
அளித்த நல் இல்லக் கிழத்தி!
பாலமாய் உறவில் நெகிழ்ந்து,
பரிவுடன் அணைக்கக் கண்டேன்!
சீலமாய் வாழ்ந்த அண்ணல்,
சிறகசைத்து பறந்தார் போலும்!

தீஞ்சுவை பாக்கள் கூட்டும்
தெள்ளிய தமிழைப் போலே,
செஞ்சுடர் அறிவுப் பார்வை,
செறிந்த நல் அறிவின் கேள்வன்!
மண்ணகம் போற்ற வாழ்ந்தார்,
மருவிலா இனிமை செய்வோன்!
விண்ணகம் நோக்கி விரைந்தார்,
வீறுகொள் புகழைக் காக்க!

- கவிஞர் கவிவளவன் (12-04-2014)